V. GOVERNMENT BILLS.

(1) The Travancore-Cochin Limeshells (Control) Repeal Bill, 1964.

The Hon. Sri R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

'That leave be granted for the introduction of the Travancore-Cochin Limeshells (Control) Repeal Bill, 1964.'

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

(2) The Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964).

*கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று முதல் விவாதத்தில் உள்ள பஞ்சாயத்துத் திருத்த மசோதாவில் இருபதுக்கும் மேற்பட்ட அங்கத்தினர்கள் கலந்து கொண்டு, தங்கள் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் நேரடியாக நடக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் பலர் வலியுறுத்திக் கூறினார்கள். பொதுவாக விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஒன்றிரண்டு அங்கத்தினர்கள் மிகவும் காரசாரமாக, பார்லிமெண்டரி சம்பிரதாயத்திற்கு விரோதமான வார்த்தைகளைக் கூடத் தாராளமாக உபயோகித்துப் பேசினதை நாம் எல்லோரும் கேட்டோம். இது மிகவும் வருந்தத்தக்கதாகும். சாதாரணமாக மிக்க பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டிய கனம் அங்கத்தினர்கள், அமைச்சர்களைக் குறை கூறலாம், தவறுகளைச் சுட்டிக்காட்டலாம். ஆனாலும், ஜனநாயக பார்லிமெண்டரி அமைப்புக்கு உட்பட்டு பொறுப்புணர்ச்சியுடன் பேசினால் நல்லது என்று கூறிக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, உறுப்பினர்களே தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற முறைதான் நம் நாட்டில் வழக்கமாக இருந்து வருகிறது. 1920-ஆம் வருடத்திய முனிசிபாலிட்டி சட்டத்தின்படி தேர்தல்கள் பல நடந்திருக்கின்றன. மாநகராட்சி தேர்தலிலும், பழைய ஜில்லா போர்டு தலைவர் தேர்தலிலும் அங்கத்தினர்கள் ஒன்று கூடித் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்வது என்ற முறை கையாளப்பட்டு வந்திருக்கிறது. நம்முடைய நீண்ட கால அநுபவத்தை வைத்துக்கொண்டு, இந்த விஷயம் நல்ல முறையில் தான் ஆராயப்பட்டு இருக்கிறது. அவசரப்பட்டு ஒன்றும் முடிவுக்கு வரவில்லை.

1950-ஆம் வருடத்திலே பஞ்சாயத்துச் சட்டம் வந்து பஞ்சாயத்துத் தலைவர்கள், தேர்தலில் எம்முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை சாதாரணமாக எல்லோரும் அறிந்திருக்கலாம்.